**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**O.S.No: 95/2022** **தேதி: 18.02.2026**

**வா.சா. 2 – சுப்பிரமணியன்**

**<u>4 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

நிருபண வாக்குமூலம் தயார் செய்வதற்கு தகவல் சொன்னது நான் தான். தாவா சொத்தின் சர்வே எண் தெரியாது. அது 2.1/2 ஏக்கர் இடம். தாவா சொத்திற்கு வடக்கு பக்கம் என்னுடைய இடம் உள்ளது. அந்த சொத்து எனக்கு பூர்விக சொத்து. அந்த சொத்திற்கு எனது தாத்தா பெயரில் பட்டா தாக்கலாகி உள்ளது. எனது பெயரில் பட்டா இல்லை. 1 முதல் 6 பிரதிவாதிகள் யார் என்று அவர்கள் பெயரை சொல்லி கேட்ட போது சாட்சி தெரியாது என்று சொல்லிவிட்டார். சாட்சி தாவா சொத்து திருமால்காந்தியுடையது என்று சொல்வதற்காக வந்ததாக சொல்கிறார். மற்றபடி 6 ம் பிரதிவாதி யார் என்றும், அவர் தாவா சொத்தில் அனுபவம் உள்ளரா என்ற விபரமும் தெரியாது. நான் நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சின்னமணக்குளம் கிராமத்தில் வசித்து வருவதாக சொல்லியுள்ளேன். நான் பிறந்ததில் இருந்து அங்கு தான் வசித்து வருகிறேன். எங்கள் ஊருக்கும், தாவா சொத்து இருக்கும் இடத்திற்கும் 3 கிமீ தொலைவு இருக்கும். தாவா சொத்திற்கு அருகே சென்று 3 வருடம் காலம் இருக்கும். தாவா சொத்திற்கு யார் கிரையம் வாங்கி என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. எனது நிருபண வாக்குமூலத்தில் கார்மேக தேவர் என்று ஒருவரை குறிப்பிட்டுள்ளேன் அவர் யார் என்றால் வாதியின் பங்காளி. கார்மேக தேவர் என்பவர் சோலார் நிறுவனத்திற்கு தன்னுடைய பாகத்தை விற்றுவிட்டதாக

சொல்லியுள்ளேன். எவ்வளவு இடத்தை விற்றுள்ளார் என்று எனக்கு தெரியாது. கார்மேகத் தேவரும், வாதி திருமால்காந்தியும் பாக பிரிவினை செய்து கொண்டதாக சொன்னார்கள் நான் அந்த இடத்திற்கு செல்லவில்லை. எழுத்து பூர்வமாக பாக பிரிவினை செய்து கொண்டார்களா அல்லது வாய்மொழியாக பாக பிரிவினை செய்து கொண்டார்களா என்று எனக்கு தெரியாது அவர்களுக்குள் பாக பிரிவினை செய்து கொண்டார்கள். நான் எனது நிருபண வாக்குமூலத்தில் வாதி நிலத்தில் பருத்தி, சோளம், மல்லி ஆகியவை பயிர் செய்ததாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து எத்தனை வருடங்களாக தரிசாக உள்ளது என்றால் கடந்த 2 , 3 வருடங்களாக நான் அங்கு செல்லவில்லை. ஆனால் தரிசாக கிடைக்கிறது என்று எனக்கு தெரியும்.

இவ்வழக்கில் 4 ம் பிரதிவாதி தாவா சொத்தை கிரையம் வாங்கி சோலார் வேலி அமைத்து மின் உற்பத்தி செய்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. அந்த பகுதியில் சோலார் மின் உற்பத்தி செய்கின்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை எதுவும் வரவில்லை. வாதி என்னை சாட்சி சொல்ல அழைத்து வந்தார். நான் வாதிக்கு வேண்டப்பட்டவர் என்றும், அவருக்கு ஆதரவாக நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் NLC நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டு அது மத்திய அரசால் பாதுகாக்கப்பட்டு அதில் மின் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தின் நான்கு மால் பற்றி எனக்கு தெரியாது என்று சொன்னால் பக்கத்தில் குப்பச்சி ஊரணி உள்ளது மற்ற படி நான்கு மால் தெரியாது.

(3ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.